# திருப்பூவணூர்ப் புராண வசனம்

செட்டிநாடு பிரஸ்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருப்பூவணப்புராண வசனம்.

——○——

மேற்படி தலத்தில்
திருநந்தனவனம், பசுமடம்,
அர்த்தசாமக்கட்டளை சிவ தரும
ஸ்தாபனராகிய

காரைக்குடி

பழ. மெ. மெ. பழநியப்ப செட்டியாரவர்களுக்கு

பிரமாதி௵ புரட்டாசி௴ 5௳ (21-9-39) நடைபெறும்

சிவாகமோக்த

ஷஷ்டியப்தபூர்த்தி சாந்திக்கல்யாண விசேஷத்தின்

ஞாபகார்த்தமாக

அவர்களால்

வடமொழியிலிருந்து
தமிழ வசன ரூபமாக
வெளியிடப்பெற்றது.

உ.
சிவமயம்.

# திருப்பூவனூர்

## திருநாவுக்கரசுநாயனர் தேவாரம்

—— ○ ——

### திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பூவனூர்ப் புனிதன்றிரு நாமந்தா
ணாவினூறு நூறாயிர நண்ணினார்
பாவமாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்களாவரே. (1)

என்னனென் மனையெந்தை யெனதுயிர்
தன்னன் றன்னடியேன் றனமாகிய
பொன்னன் பூவனூர் மேவிய புண்ணிய
னின்ன னென்றறி வொண்ணா னியற்கையே. (2)

குற்றங்கூடிக் குணம்பல கூடாதீர்
மற்றுந் தீவினை செய்தன மாய்க்கலாம்
புற்றராவினன் பூவனூரீசன்பேர்
கற்று வாழ்த்துங் கழிவதன்முன்னமே. (3)

ஆவின் மேவிய வைந்தமர்ந்தாடுவான்
றூவெணீறு துதைந்தசெம் மேனியான்
மேவநூல்விரி வெண்ணியின் றென்கரைப்
பூவனூர் புகுவார் வினை போகுமே. (4)

புல்ல மூர்தியூர் பூவனூர் பூம்புன
னல்லமூர்தி நல்லூர் நனிபள்ளியூர்
தில்லையூர் திருவாரூர் சீர்காழி நல்
வல்ல மூரென வல்வினை மாயுமே. (5)

அனுசயப்பட்டது விது வென்னாதே
கனிமனத்தொடு கண்களு நீர்மல்கிப்
புனிதனைப் பூவனூரனைப் போற்றுவார்
மனிதரிற்றலையான மனிதரே. (6)

ஆதி நாத னமரர்களர்ச்சிதன்
வேதநாதன் வெற்பின் மடப்பாவையோர்
பாதியானான் பரந்த பெரும்படைப்
பூத நாதன்றென் பூவனூர் நாதனே. (7)

பூவனூர்தண் புறம்பயம் பூம்பொழி
னாவலூர் நள்ளாறொடு நன்னிலங்
கோவலூர் குடவாயில் கொடுமுடி
மூவலூருமுக் கண்ணனூர் காண்மினே. (8)

ஏவமேது மிலாவமணேதலர்
பாவகாரிகள் சொல்லைப் பட்டு நான்
றேவதேவன் திருநெறியாகிய
பூவனூர் புகுதப்பெற்ற நாளின்றே. (9)

நாரணன்னொடு நான்முகனிந்திரன்
வாரணன் குமரன் வணங்குங்கழற்
பூரணன் றனைப்பூவனூர் மேவிய
காரணன்னெனை யாளுடைக் காளையே. (10)

மைக்கடுத்த நிறத்தரக் கன்வரை
புக்கெடுத்தலும் பூவனூரன்னடி
மிக்கடுத்த விரல்சிறி தூன்றலும்
பக்கடுத்தபின் பாடியுய்ந்தானன்றே. (11)

திருச்சிற்றம்பலம்.

சுவாமி திருநாமம்—புஷ்பவன நாதர்,
சதுரங்க வல்லவ நாதர்

தேவியார் இருவர்திருநாமம்-கற்பகவல்லி, ராஜராஜேசுவரி.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருப்பூவனூர்ப் புராண வசனம்.

## விநாயகர் முதலியோர் துதி.

பூவளரும் புட்பவனசாட்சி விநாயகன் செவ்வேள் புனிதநந்தி
தேவளரும் புட்பவன நாதனற்கற் பகவல்லி திகழுமேர்கொள்
மாவளரு மிராசராசேசுவரி யவள்பணிப்பெண் பதம் வணங்கி
நாவளருந்தமிழ்மொழியினுத்தலத்தின் மகிமைதனைநவிலலுற்றேன்

பூவுலகத்திலே, புண்ணிய பூமியாகிய நைமிசாரணியத்திலே அநேகமுனிவர்கள் யாகஞ் செய்து கொண்டிருக்கும் பொழுது சூத முனிவர் வந்தார். முனிவர்கள், அவரைக் கண்டவுடன் இருக்கைவிட்டெழுந்து எதிர் கொண்டழைத்து வந்து ஆசனத்திலிருத்தி வணங்கிப் பூசித்து, முனிபுங்கவரே! தேவரீர் வியாச முனிவரிடத்தில் புராண இதிகாச முதலிய யாவற்றையும் நன்குணர்ந்திருக்கிறீர்கள். தாங்கள் சிவபெருமானுடைய மகிமைகளைப் பன்முறை கூறக்கேட்டும் ஆசை அமைந்திலது, ஆதலின் இன்னும் கேட்க விரும்புகின்றோம். முன்னொரு சமயம் சிவபெருமான் எழுந்தருளியிருக்குந் தலங்கள் இத்தனை என்று கூறிவரும் பொழுது புஷ்பவனம் என்று ஒரு உத்தம சிவஸ்தலம் உள்ளதாகக் கூறியருளினீர். அதன் மகிமையைக் கேட்க விரும்புகின்றோம் என்று பிரார்த்திக்க; முனிவர்களே! அப் புட்பவன நாதருடைய மகிமையை என்னறிவிற்கு எட்டியவரை கூறுகின்றேன் என்று சொல்லத் தொடங்கினர்.

## முதல் அத்தியாயம்.

சோழ நாட்டிலே, காவேரிக்குத் தென்பாலுள்ள சுவேத நதி (வெண்ணாற்று)க்கும் வடாரணியம் என்னும் ஆலங்குடிக்கும் தெற்கிலும், திருவாரூருக்கு இரண்டு யோசனை தூரம் மேற்கிலும், சம்பகாரணிய மென்னும் மன்னார்குடிக்கு ஒரு யோசனை தூரம் வடக்கிலும், கோவில் வெண்ணி க்ஷேத்திரத்துக்குக் கிழக்கிலும் மூன்று நாழிகைவழி வின் தூரமுள்ளதாய், பாம்பணி நதியின் மேல் கரையில் புஷ்பவன க்ஷேத்திரம் இருக்கிறது. அது தன்னையடைந்தவர்களின் பாவங்களை நீக்கி ஞானத்தையளித்து மோக்ஷத்தைக்கொடுக்கும். அங்கு இயற்றப்பட்ட ஹோம ஜெப முதலிய சற் கருமங்களெல்லாம் தேவர் முதலியோர்க்கு மிகுந்த திருப்தியைக் கொடுக்கும். அமாவாசை, பௌர்ணிமை, சூரிய சந்திர கிரகணங்கள், ஞாயிற்றுக்கிழமை, வெள்ளிக்கிழமை அர்த்தோதய மகோதய முதலிய புண்ணியகாலங்கள் இவைகளில் செய்கிற சற் கருமங்களெல்லாம் மனிதருக்கு மிகுந்த நன்மையைத் தரும். அத் தலத்தில் வசிப்பவர்களுக்கு யமனால் வரும் துன்பமில்லை. அங்கு க்ஷீரநதியும் கருங்குட்ட நோயையும் நீக்கத்தக்க 'கிருஷ்ணகுஷ்டஹாரம்' என்னும் தீர்த்தமும் உள்ளன. அத் தீர்த்தத்தில் முன் சொல்லிய புண்ணிய காலங்களில் ஸ்நானஞ்செய்து தர்ப்பணம் ஜெபம் தான முதலியவற்றைச் செய்தால் அதிக பலன் உண்டாகும். அத்தீர்த்தத்தின் வடகிழக்குத் திசையில் சிவபெருமானுடைய ஆஞ்ஞையின்படி சிவகணங்களால் பிரதிஷ்டை செய்யப் பெற்ற சிவலிங்கப் பெருமான் எழுந்தருளியிருக்கிறார். முற்பிறவியிற் புண்ணியஞ் செய்தவர்களுக்கே அந்தலிங்க தரிசனம் கிடைக்கும். அந்த லிங்க மூர்த்தியைக் காலையில் தரிசித்தால்பாவங்கள் நீங்கும். உச்சிக் காலத்தில் தரிசித்தால் பரம பலனுண்டாகும். சாயங்காலத்தில் தரிசித்தால் மோக்ஷங் கிடைக்கும். அர்த்த சாமத்தில் தரிசித்தால் எல்லாப் பலனும் கிடைக்கும் அங்கே கருணையே உருவமாகக் கற்பகவல்லி யென்னும் தேவியும் அவருடைய அம்சமாக உதித்த ராஜராஜேசுவரி என்னும் மற்றொரு தேவியும் வீற்றிருக்கிறார்கள். அவ்விருவருடைய தரிசனத்தால் போக மோக்ஷங்கள் கிடைக்கும்.

இப்புஷ்ப வனத்தின் வடபால் புன்னை மரங்கள் நிறைந்த ஸ்தானத்தில் ஸ்ரீ ராமபிரான் சடாயுவின் விருப்பத்திற்கிணங்கி சீதாலட்சுமணா சகிதராய் வீற்றிருக்கின்றார். அதற்கு மேற்கே தரும புஷ்கரணி யென்னும் உத்தம தீர்த்தம் இருக்கிறது எந்த ஸ்தலத்தில் சிவாலய விஷ்ணுவாலயங்கள் ஒருங்கு அமைந்துள்ளனவோ அந்த ஸ்தலத்தைப் பாஸ்கர க்ஷேத்திர மென்று சொல்லுகிறார்கள். அங்கே விதிப்படி சிவாலய தரிசனம் செய்பவர்கள் இஷ்டசித்திகளைப் பெறுவார்கள். அநேகர் தவஞ் செய்து விரும்பிய பலனை அடைந்திருக்கிறார்கள். அந்த க்ஷேத்திரம் தலம், தீர்த்தம், மூர்த்தி யென்னும் மூன்று விசேஷமும் ஒருங்கு அமையப் பெற்றுள்ளது என்று கூறினார்.

## இரண்டாம் அத்தியாயம்.

அது கேட்ட முனிவர்கள், சிவபெருமான் அந்த க்ஷேத்திரத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யும்படி சிவகணங்களுக்கு எப்பொழுது கட்டளையிட்டார். அதற்கு எக்காரணத்தால் புஷ்பவனம் என்று பெயர் வந்தது? என்று கேட்கச், சொல்லத் தொடங்கினார்.

வெகு காலத்துக்கு முன் சிவபெருமான் உமாதேவியாரோடு திருக்கைலாய மலையில வீற்றிருக்கும் பொழுது, ரைவத மனுவின் கால இறுதியில் சமுத்திரம் பெருகி வந்தமையால் பூமியில் அநேக இடங்கள் அழிந்தன. பிராணிகள் மிகக் குறைந்தன. சாக்ஷுஷ மனுவின் காலத்தில சமுத்திரம் பெருக்கு வற்றி அவர் கருத்தின்படி தேசங்கள் பட்டணங்கள் கிராமங்கள் மனிதர் மிருகங்கள் பக்ஷிகள் மரம் செடி கொடி முதலியவைகள் விருத்தியாகிச் செழித்தன.

திருக்கைலாசபதியாகிய சிவபெருமான் திருவிளையாட்டாக அவைகளைப் பார்க்க எண்ணி, விநாயகர் சுப்பிரமணியர் உமாதேவியாரோடு, நந்தி முதலிய கணங்களும் இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் சூழ்ந்துவர, விமானத்தில் ஏறித் தென்திசை நோக்கி ஆகாயமார்க்கமாய்ப் புறப்பட்டு, வரும்பாரக்

கத்தில் ஆங்காங்குள்ள தேசங்கள் முதலியவற்றை உமாதேவியாருக்குக் காண்பித்துக் கொண்டுவரும் பொழுது, ஒரு நறுமணம்சிவபெருமானுடைய திருமுக மண்டலத்தில் உலாவிக் கமழ,சிவபெருமான் வியப்புற்று இம்மணம் எங்கிருந்து வருகிறதென ஆராய்ந்து பூமியை நோக்கிப், புஷ்பித்த மரங்கள் அடர்ந்தவனம் ஒன்றைக் கண்டு, இங்கிருந்தே இந்த நறுமணம் வருகிறதென நிச்சயித்து அம் மணத்தைக்கிரகித்துக் கொண்டு தங்கி நின்றார்.

அப்பொழுது நந்தி முதலியகணங்கள் சிவபெருமானை வணங்கி, சுவாமீ! இவ் வனத்தில் நறுமணமுள்ள அநேக மலர்கள் நிறைந்திருக்கின்றன. அவை தேவரீருடைய திருநேத்திரங்களுக்கு இலக்காயினவாதலின், அவைகளால் தேவரீரை நாங்கள் பூசிக்க, உம்முடைய அடிமைகளான எங்களுக்கு ஆஞ்ஞை தந்தருள வேண்டும் என்று பிரார்த்திக்க, கணநாதர்களே, இவ் வனத்தில் நமது லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பூசியுங்கள் நமது லிங்கபூசையானது நமக்கு நேரே செய்யும் பூசையினும் சிறந்ததாகும். நீங்கள் பூசிக்கும் வரை விமானத்தில் ஆரோகணித்தவாறே இங்கு நிற்கின்றோம். எந்த லிங்கத்தில் மந்திர பத்தி பூர்வமாக யார் பூசித்தாலும் அந்த லிங்கத்தில் சாந்நித்தியஞ் செய்வோம் என்று அருளிச் செய்தார்.

## மூன்றாம் அத்தியாயம்.

உடனே நந்தி முதலிய கணநாதர்கள் பிரதிஷ்டைக்குரிய இடத்தை ஆராய்ந்து, தரையைச் சமப்படுத்தி, கடப்ப விருக்ஷங்களின் நடுவே மேடையமைத்து நருமதை நதியிலிருந்து லிங்கங் கொண்டு வந்து, விதிப்படி பீடம் இயற்றி, பிரதிஷ்டைக்கு வேண்டிய புண்ணிய தீர்த்தம் பொற்குடம் வஸ்திரம் அன்ன முதலிய உபகரணங்களெல்லாவற்றையும் சேர்த்துச், சிவாகம விதிப்படி மந்திர பூர்வமாகக் கும்பங்களை ஸ்தாபித்துப் பூசித்து, விநாயகப் பெருமானையும், அவருக்கு ஈசானத்தில் சிவலிங்கப் பெருமானையும் அவருக்கு ஈசானத்தில் உமாதேவியாரையும் பிரதிஷ்டித்து, கும்ப தீர்த்தங்களால் அபிஷேகித்து, மகாபி

ஷேகமும் செய்து, ஆடை ஆபரண முதலியவற்றால் அலங்கரித்து நிவேதனம் சமர்ப்பித்துச், சோடசோபசாரஞ் செய்து, லக்ஷார்ச்சனை பண்ணிக், கர்ப்பூர தீபங்காட்டி நமஸ்கரித்து நின்று தோத்திரஞ் செய்யத் தொடங்கினார்கள்.

தேவரே! எங்கும் நிறைந்தவரே! சர்வோத்கிருஷ்டரே! ஆதியந்தம் இல்லாதவரே! உருவில்லாதவரே! பரமானந்தரே! காலாதீதரே! சர்வவித்தைகளுக்கும் ஸ்தானமாக உள்ளவரே! சம்புவே! நிராதாரரே! அனைத்துக்கும் ஆதாரமானவரே! நீர் யாதிலும் பற்றற்றவர். விரும்பியவாறு வடிவங் கொள்பவர். பிரமன் விட்டுணு உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளாயிருந்து விளையாட்டாக உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் செய்கின்றீர். மகத் முதலிய தத்துவங்களுக்கு அந்தர்யாமியாகப் பிரகாசிக்கின்றீர்.

மகேசரே! ஆன்மாக்களைக் கன்மாநுசாரமாக நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, எண்பத்துநான்குலக்ஷ யோனி பேதங்களாகப் படைத்து, உலகம் காலம் தொழில் இந்திரியம் சரீரம் முதலியவற்றை யமைத்து இயக்கி, அவரவர் செய்யும் புண்ணிய பாவங்களுக்கு ஈடாக இன்ப துன்பங்களை யநுபவிக்கச் செய்து, கன்மமார்க்க ஞானமார்க்கங்களிற் செலுத்துகின்றீர். எவ்வெவரை எப்பொழுது பாசபந்தங்களினின்று விடுவிக்க எண்ணுகின்றீரோ அவரவருக்கு அப்பொழுது ஞானத்தை யளிக்கின்றீர். அவர்கள் மோக்ஷமடைகின்றார்கள். உமது திருவருட் செயல்களை யாரால் அறிய முடியும். எங்களுக்கு நல்லது இன்னது, கெட்டது இன்னதென்று தெரியாது. எங்களைக் காத்தருள வேண்டும்.

வேதங்களால் அறியப்படாதவரும் வேதங்களின் தலைவருமான உமக்கு நமஸ்காரம். பிரணவ ரூபியும் பிரணவப் பொருளுமான உமக்கு நமஸ்காரம். மாயா தீதராயும் பேரொளி யுருவராயும், உலகெலாந் தானாகியும், அதனின் வேறாகியும் அதன் காரணராயும், தத்துவ ரூபியாயும், அவற்றை நடத்துபவராயும் உள்ள

உமக்கு நமஸ்காரம். சூரியன் சந்திரன் அக்கினி யென்னும் மூன்று கண்களையுடையவரே! பிரம விஷ்ணுக்களாலும் காண முடியாதவரே! மன்மதனை யெரித்தவரே! தக்ஷயாகத்தை அழித்தவரே! நீலகண்டரே! சரபரூபரே! யமனை உதைத்தவரே! உமக்கு நமஸ்காரம். கிருபா சமுத்திரமே! எங்களைக் காத்தருள வேண்டும் என்று துதித்தார்கள். உடனே சிவபெருமான் அந்த லிங்கவுருவினின்றும்வெளிப்போந்து நீங்களியற்றிய பூசை தோத்திரம் பத்தி இவைகளால் மிக மகிழ்ச்சியுறுகின்றோம். உங்களுக்கு வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று ஆஞ்ஞாபித்தருளி, அவர்களின் வேண்டுகோளின்படி, கணநாதர்களே! நாம் இந்த லிங்கத்தில் சாந்நித்தியமாயிருந்து தரிசிப்போர்க்குப் பாவங்களை நீக்கிப் போக மோக்ஷங்களைக் கொடுக்கின்றோம். இவ்வனம் எக்காலமும் பூத்துக் கொண்டிருப்பதால் புஷ்ப வனம் என்று பிரசித்தி பெற்று, தரிசிப்பவர்களுக்கு எல்லா நன்மைகளையும் தந்து உத்தம க்ஷேத்திரமாய் விளங்குக. நீங்கள் துதித்த தோத்திரத்தால் நம்மைத்துதிப்பவர்களுக்கு அவர்கள் விரும்பிய பலனைக் கொடுக்கின்றோம். நீங்கள் இங்கு வந்து வருஷத்துக்கொரு முறை நம்மைப் பூசியுங்கள் என்று அருளிச் செய்து லிங்கத்தில் மறைந்தருளினர். கணநாதர்கள் சிவலிங்கப் பெருமானையும் கற்பகவல்லியம்மையாரையும் வணங்கிக் கொண்டு ஆகாயத்திற் சென்று, விமானத்தில் உமாதேவியாருடன் எழுந்தருளியிருக்கும்சிவபெருமானையடைந்து அஞ்சலியஸ்தராய் நின்றார்கள். சிவபெருமான் அவர்களுடன் மற்றைய இடங்களையும் பார்த்துக் கொண்டு திருக்கைலாசமலையை யடைந்தருளினர். சிவகணங்களால் பிரதிஷ்டிக்கப் பெற்ற இந்த லிங்கம் சுயம்பு லிங்கத்துக்குச் சமமாயுள்ளது.

## நான்காம் அத்தியாயம்.

அது கேட்ட முனிவர்கள் கிருஷ்ண குஷ்டஹரம் என்னும் தீர்த்தம் எப்பொழுது எக்காரணத்தால் உண்டாயிற்று? என்று கேட்கச் சொல்லத் தொடங்கினர்.

முன் கிருதயுகத்திலே, சோழநாட்டிலே, சித்திரபுரியென்னும் பட்டணத்திலே தருமவர்மன் என்னும் அரசன் இருந்தான். அவன் சமஸ்த சாஸ்திரங்களையும் அறிந்தவன். தயை நிறைந்தவன். நீதி முறைப்படி அரசாட்சி செய்பவன். தருமமே ஆபரணமாக உடையவன். அவ்வளவு மேம்பாடுற்றவனாயிருந்தும் பூர்வ கர்மத்தால் அவனுக்குக் கருங் குஷ்ட வியாதி யுண்டாகி அநேக சிறந்த வைத்தியர்களாலும் தீராமல் வருந்திக் கொண்டிருக்குங் காலத்தில், அவனுடைய நல்வினை வசத்தால் இரேணுகர், என்னும் முனி சிரேஷ்டர் அங்கு வந்தார். அரசன் அவரைக் கண்டவுடன் எழுந்து நமஸ்கரித்து உபசரித்து, முனிவரே! எனக்கு இந்த நோய் வரக் காரணம் யாது? தேவரீருடைய தரிசனங் கிடைத்தமையின் இது நிச்சயமாக நீங்கி விடுமென்று எண்ணுகின்றேன் என்று பிரார்த்திக்க; அவர் அதன் காரணத்தை ஞான திருஷ்டியால் அறிந்து கூறுகின்றார்.

அரசனே! நீ இதற்கு முன் மூன்றாம் பிறவியில் கௌடதேச அரசனாக இருந்து குடிகளை நன்கு பாதுகாத்து அரசாட்சி செய்து வருங்காலத்தில், சாஸ்திர விற்பன்னரும் பூர்வ கர்மாவினால் குட்டநோயுற்றவரும் மனைவி மக்களுடன் ஊர்தோறும் யாசித்துத்திரிபவருமான ஏழைப்பிராமணரொருவர் வர; அவரை உபசரித்துப் பேசிக்கொண்டிருக்குங்கால் அவரது நோயின் துர்க்கந்தம் வீச; இப்படிப்பட்ட கொடிய வியாதியுள்ள நீர் நமது சபைக்கு வரலாமா? என்று நிந்தை கூறினாய். அவர் நான் கஷ்டதசையிலிருப்பதால் யாசகத்தின் பொருட்டு வந்தேன். ஏதேனும் தருவதைப் பெற்றுக்கொண்டு போகிறேன் என்று சாந்தமாகச் சொல்லவும்; கோபங்கொண்டு அவருக்கு ஒன்றும் கொடாமல் துரத்தி விட்டாய். நோயாளிகள், சரண் புகுந்தோர் இவர்களை நிந்திக்காமல் காப்பாற்றுவது அரசனுக்குக் கடமையாகும். ஒருவன் முற்பிறவிகளிற் செய்த புண்ணிய பாவபலன்களை வருகிற பிறவிகளில் அநுபவித்தே தீரவேண்டுமாதலாலும் யாசகத்துக்கு வந்த பிராமணரை நிந்தித்த தோஷ

பலனை அநுபவிக்குங்காலம் இதுவாயிருத்தலாலும் உனக்கு இந்த நோய் உண்டாயிற்று. ஆயினும் இதற்குப் பரிகாரஞ் சொல்லுகிறேன். தலம் தீர்த்தம் மூர்த்தி யென்னும் மூன்று விசேஷமும் ஒருங்கு அமையப்பெற்ற சிவக்ஷேத்திரத்துக்குச் சென்று புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பிதிர் தர்ப்பணம் பண்ணித் தானங்கள் கொடுத்துச் சிவலிங்க தரிசனஞ் செய்துகொண்டு மாகேசுரபூசை பிராமண போசனம் ஏழைகளுக்கு அன்னமிடுதல் இவைகளைச்செய்து வருவாயாயின் இப்பிணி நீங்கும் என்று உரைத்து முனிவர் சென்றார்.

அரசன் க்ஷேத்திர யாத்திரை செய்ய விரும்பி ஸ்ரீசைல முதல் ஆங்காங்குள்ள ஸ்தலங்களில் மும்மூன்று நாள் தங்கி முனிவர் கூறியவாறே சிவதரிசன முதலியன செய்துகொண்டு வரும்பொழுது காவேரி நதியை அடைந்து அதன் கரையில் இரு மருங்குமுள்ள ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு ஒரு நாள் மாலையில் புஷ்பவனத்தையடைந்து அன்றிரவு தங்கி மறுநாட்காலையில் சிவாலய தரிசனஞ்செய்ய விரும்பி அவ்வாலயத்தின் தென் மேற்றிசையிலுள்ள தடாகத்தில் ஸ்நானஞ் செய்து நித்திய கருமங்களை முடித்துச் சிவாலயத்துக்குச் சென்று அபிஷேகம் நிவேதனம் முதலியன நன்கு நடாத்திச் சிவதரிசனஞ் செய்துகொண்டு, மத்தியானத்திலும் அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து மாகேசுரபூசை முதலியவற்றை நடத்திச், சாயங்காலத்தில் சிவதரிசனஞ்செய்து கொண்டு இருக்கைக்கு வந்து, அன்றிரவு அரிப்பு இன்றி நன்கு துயின்று, இரண்டாம் நாள் ஸ்நானத்தால் புண்ணின் உபத்திரவம் நீங்கி, மூன்றுநாள் ஸ்நானத்தால் புண் காய்ந்து வருதலைக் கண்டு அங்கேயே வசிக்க நிச்சயித்து இருந்துவரும் நாளிலே நாளுக்கு நாள் பிணி குறைந்து ஆறாம் நாளிலே முழுதும் நீங்கித் தேகம் காந்தியுடன் விளங்கிற்று. அரசன் ஒரு மாதம் வரை அங்கிருந்து ஆலயத்தை ஜீர்ணோத்தாரணம் செய்து மாசி மாதத்தில் பிரமோற்சவம் ஆரம்பித்து மக நக்ஷத்திரங் கூடிய பௌர்ணிமையன்று தீர்த்தோற்சவம் நடத்திச் சிவபெருமானையும் உமா தேவியாரையும் நமஸ்கரித்துத் துதிக்கலானான்.

உண்மைப் பொருளும், ஞான ரூபியும, சுகத்துக்கு இருப்பிடமாயுள்ளவரும், லோகாதீதரும், பிறப்பு இறப்பு இல்லாதவரும், வேற்றுமையற்றவரும், பிரபஞ்ச காரணரும், பரிபூரணரும், உருவற்றவரும், சோதி ரூபியும், எக்காலத்தும் உள்ளவரும், காண்பிக்க ஒண்ணாதவரும், பழமையானவரும், பிரபுவும், புஷ்ப வனத்துக்குத் தலைவருமாகிய தேவரீரை நமஸ்கரிக்கிறேன்.

எவரது ஆணையே உலகத்தின் சிருட்டி, திதி, சங்காரங்களுக்குக் காரணமோ; எவரிடம் இவ்வுலகம் இருக்குமோ! எவரால் முக்குணமுள்ள மாயையிலிருந்து மகத் தத்துவம் அகங்காரம் ஆகாயம் வாயு அக்கினி ஜலம் பூமி இந்திரியக் கூட்டம் இவைகளும் இவைகளை நடத்தும் தேவர்களும் உண்டாக்கப் படுகிறார்களோ! எவர் திருவிளையாட்டாக மும்மூர்த்தி யுருக் கொண்டனரோ; இப் புஷ்பவனத்தில் சதா சாந்நித்தியராய் வீற்றிருக்கின்ற அத்தனைய தேவரீரை நமஸ்கரிக்கிறேன்.

எவர் ஆன்மாக்களைப் படைத்து அவர்களுக்கு அளவில்லாத தொழில் பெயர் உருவம் காலம் இடம் இவைகளை நியமித்து அவர்களோடு கலந்து நின்று இடைவிடாமல் அவர்களுடைய அறிவைப் பிரவிர்த்திக்கச் செய்கின்றாரோ அப்படிப்பட்ட தேவரீரை நமஸ்கரிக்கிறேன்.

பிரம விஷ்ணுக்கள் யாருடைய முடியையும் அடியையும் காணாது சலித்தனரோ, எவராலன்றி அக்கினி வாயுக்கள் ஒரு ஒரு தூசியையும் எரிக்கவும் அசைக்கவும் வலிமையற்றனவோ, சூரியன் அக்கினி வாயு யமன் இந்திரன் முதலியோர் யாரிடத்துள்ள பயத்தால் தத்தம் காரியங்களை ஒழுங்காக நடத்துகின்றார்களோ, யோகிகளாலும் அறிய முடியாத அப்படிப்பட்ட தேவரீரை நான் நமஸ்கரிக்கின்றேன்.

விஷ்ணு முதலியோரால் ஜெயிக்க முடியாத அந்தகாசுரனையும், திரிபுரங்களையும், தடுக்க முடியாத விஷத்தையும் யார் ஜெயித்தும் தடுத்தும் தலைவராய் விளங்கினாரோ அப்படிப்பட்ட தேவரீரை நமஸ்கரிக்கின்றேன்.

தக்ஷ யாகத்தை அழித்தவராயும், சலந்தராசுரனைச் சங்கரித்தவராயும், பிரவகித்து வந்த கங்கையைத் துளியளவாகச் செய்து சடையில் அடக்கினவராயும் உள்ள தேவரீரை நமஸ்கரிக்கின்றேன்.

விஷ்ணு மூர்த்தி தன்னுடைய கண்ணைப் பிடுங்கி யாருடைய திருவடிகளில் அருச்சித்துச் சக்கராயுதம் பெற்றனரோ, யாருடைய பாத பூஜையால் தேவர்கள் தத்தம் பதவிகளைப் பெற்றார்களோ, யாரிடம் வைத்த அன்பால் அகஸ்தியர் முதலிய முனிவர்கள் மேன்மையடைந்திருக்கிறார்களோ அப்படிப்பட்ட தேவரீரை நமஸ்கரிக்கின்றேன்.

தீனரைக் காக்கும் கருணையால் அநேக தலங்களில் யார் சிவலிங்கத் திருமேனி கொண்டு வீற்றிருக்கின்றாரோ, யாருடைய லிங்க தரிசனம் பாவங்களை நீக்கிப் போக மோக்ஷங்களைக் கொடுக்குமோ, யாருடைய திருப்பெயரை எந்தக் காரணத்தால் நினைத்தாலும் பாவம் நீங்குமோ, அத்தகைய தேவரீரை நமஸ்கரிக்கின்றேன்.

ஒருவராலும் தீர்க்க முடியாத இந்த நோய் தேவரீருடைய புண்ணிய தீர்த்த ஸ்நானத்தாலும், லிங்க தரிசனத்தாலும் நீங்கப் பெற்றும் பிரபஞ்ச வாழ்க்கையில் ஆசை விடவில்லை. அநேக பிறவிகளிற் க்லேச முற்றுச் சம்சார சாகரத்தில் ஆழ்ந்து கிடக்கின்ற என்னைத் தயை கூர்ந்து கைதூக்கியாள வேண்டும்.

இவ்வுடலம், ஆகார முதலிய ஆறு அலைகளால் தாக்குண்டு, அறுவகை விகாரங்களோடும், ஒன்பது அவஸ்தைகளோடுங் கூடி, நோய்கட்கு இடமாய்த், துர்நாற்றமுடையதா யிருக்கிறது. மனமோ இயல்பாக மிக்க ஆசையுள்ளது. மனத்தின் வழியே இந்திரியங்கள் செல்லுகின்றன. அவைகளுடன் வசிப்பதற்கு எனக்கு வலிமை யில்லை. ஆதலின் இப்பொழுதே என்னைக் காத்தருள வேண்டும்.

கிருகம், மனைவி, மகன், ஐசுவரியம், பிரபுத்துவம், இராச்சியம், யானை, குதிரை, இரத்தின முதலிய ஆபரணம், நறுமண்

மலர், பலவகை வஸ்திரம், உணவு முதலியன அழிவுள்ளனவாயும் தேவரீரைத் தியானித்தற்குத் தடை செய்வனவாயுமிருத்தலால் இப்பொழுதே என்னை ஆள வேண்டும்.

எளியவனுர், அறிவிலியும் உமது திருவடியைத் தியானிக்க எப்பொழுதும் திறமையற்றவனும், பலவகை ஆசை, கோப முதலிய பகைவரால் அழிக்கப்பட்ட புத்தியுள்ளவனும் அவைகளை யடக்க வன்மையற்றவனும், அவைகளின் வியாபாரத்துக்கு இருப்பிடமானவனும்; சுதந்திரமில்லாதவனும், மோகத்தில் ஆழ்ந்தவனுமாகிய என்னைப் பெரியோருக்குச் சார்பாய் விளங்கும் தேவரீர் காத்தருள வேண்டும்.

என்று அரசன் துதித்துப் பிரார்த்திக்கச், சிவபெருமான் கருணை கூர்ந்து சிவலிங்கத்தினின்றும் வெளிவந்து இடபாரூடராய் உமா தேவியாரோடு எழுந்தருளி நின்று, அரசனே! உனது பூசை பக்தி தோத்திரங்களால் மிக மகிழ்ச்சியுற்றோம். வேண்டிய வரங்களைக் கேட்பாயாக என்று ஆஞ்ஞாபிக்க; அரசன் அஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து நின்று சுவாமீ! நான் யாதும் அறியேன். எனக்கு நன்மை பயக்கத்தக்கதைத் தேவரீரே தந்தருள வேண்டும் என்று பிரார்த்திக்க, நீ நம்மிடத்தில் என்றும் அன்புள்ளவனாய் மனைவி மக்களோடு பூமியை ஆண்டு வாழ்ந்திருந்து தேகாந்தத்தில் நமது உலகத்தை அடைவாயாக. உன்னுடைய துதியால் நம்மைத் துதிப்பவர்களுக்கு விரும்பிய பலனைக் கொடுக்கின்றோம் என்று அருளிச் செய்து மறைந்தருளினர். அரசன் தனது நகரம் போய்ச் சேர்ந்தான். அத்தீர்த்தம் அரசனுக்குக் கரு நிறத்தையும் குஷ்ட நோயையும் போக்கினமையால் "கிருஷ்ண குஷ்டஹரம்" என வழங்கப் பெறுகின்றது. அதில் ஸ்நானஞ் செய்தால் எல்லா நோய்களும் நீங்கி நலம் பெறுவார்கள் என்று கூறினர்.

அது கேட்ட முனிவர்கள், அரசன் பல சுயம்புலிங்க ஸ்தலங்களைத் தரிசனஞ் செய்து கொண்டு வந்தும், சிவபெருமான் அவ்விடங்களில் இந்த நோயை நீக்காமல் இத்தலத்தில் நீக்கிய

காரணம் யாது? என்று கேட்க; சிவபெருமானுடைய திருவுளக் கருத்தை யாரால் அறிய முடியும்? ' இத்தலத்தைப் பூமியில் விளங்கச் செய்வதற்கே இங்கு அந்நோயை நீக்கினேனெனக் கொள்ளவேண்டும் என்று கூறினார். அது கேட்ட முனிவர்கள் உமா தேவியாரின் அம்சத்தினுதித்த மற்றொரு தேவியார் அங்கிருப்பதாகக் கூறியருளினீர். எந்தக் காலத்தில் என்ன காரணத்தால் அத்தேவியார் உதித்தார் என்று கேட்கச் சூத முனிவர் சொல்லுகின்றார்.

## ஐந்தாம் அத்தியாயம்.

பாண்டிநாட்டிலே திருநெல்வேலி யென்னும் நகரத்திலே வசுஷேணன் என்னும் அரசன் இருந்தான். அவன் நல்ல சிந்தை யுள்ளவன். நீதி வழியே அரசியற்றுவோன். அவன் மனைவி சாந்திமதி என்னும் பெயருடையவள். கற்பிற் சிறந்தவள். அவ்விருவரும் புத்திரப்பேறில்லாமையால் அநேக விரதங்களை அனுஷ்டிக்கவிரும்பி, உதயத்தில் தாமிரபர்ணி நதியில் ஸ்நானஞ்செய்து நித்திய கருமங்களை முடித்து, காலை மாலைகளில் திருக்கோயிலுக்குச் சென்று சுவாமி தெரிசனஞ்செய்துகொண்டு, சோமவாரம், பிரதோஷம், கிருஷ்ணபக்ஷ அஷ்டமி, சிவராத்திரி இத்தினங்களிற் பட்டினி யிருந்து, விசேஷ பூசை செய்வித்தும் கருத்து முற்றுப்பெறாமல் பல வருடங்கள் கழிந்தன. அப்பொழுது காந்திமதியம்மையார் அவர்கள்பால் தயைகூர்ந்து மனோபீஷ்டத்தை யளிக்கக் கருதி, திருநெல்லையப்பரை வேண்ட, சிவபெருமான் கூறுகின்றார்.

உமையே! முற்பிறவியிற் செய்த பாவத்தால் இப்பிறவியில் இவர்களுக்குப் புத்திரப்பேறில்லை. ஆயினும், இவ்விருவரும் நம்பாற் பேரன்புடையவர்களாய் வழிபட்டுவந்தலின் தேகாந்தத்தில் நமது உலகத்தை யடைவார்கள் என்று அருளிச்செய்ய, சுவாமீ! பத்தியானது எல்லாப் பாவங்களையும் நீக்குமாதலின், சிவபத்தியிற் சிறந்த இவர்களுக்கு இன்னும் பாவம் உண்டோ என்று கேட்க, சிவபெருமான் புன்முறுவல் செய்து, ஆகாமியம் சஞ்சிதம், பிராரத்தம் என்னும் மூவகைக் கன்மங்களுள், முன்னவை யிரண்டும் பிராயச்சித்தம், சற்கருமம், பத்தி, ஞானம்

இவைகளுள் ஒன்றால் நீங்கும். பிராரத்தமோ எனில், அநுப வத்தாலேயே நீங்கவேண்டும். பிராரத்த கன்மாநுபவத்தால் இப்பிறவியில் புத்திரப்பேறு கிடைக்கப்பெருத இவர்கள் நம்பால் மிகுந்த பக்தி யுடைமையின் நம்முலகை யடைவார்கள் என்று அருளிச்செய்ய, உமாதேவியார், எது எப்படியாயினும் அவர்க ளின் விருப்பத்தை எவ்விதமாவது நிறைவேற்றவேண்டும் என்று பிரார்த்திக்க, ஆனால் நீ உனது ஓர் அம்சத்துடன் அவர்களுக் குப் புத்திரியாக உதித்து மகிழ்ச்சிசெய்யக் கடவாய். உனது பணிவிடையின் பொருட்டுச் சத்த மாதருள் ஒருத்தியாகிய சாமுண்டா (சாமூண்டி) வருக. உரிய காலத்தில் நாம் வந்து உன்னை மணஞ் செய்துகொள்ளுகின்றோம் என்று அருளிச செய்தார்.

உமாதேவியார் அவ்வாறே செய்தருள எண்ணி, அரசனும் அரசியும் தாமிரபர்ணி நதியில் நீராடும்பொழுது தாமரைப் பூவின்மேல் சங்குருவாகத் தோன்ற, அதை அரசன் கண்டு இரு கரங்களாலும் எடுத்துக்கொண்டு வந்து கரையேறினவளவில் பெண் குழந்தையாயிற்று. அதுகண்ட அரசன் வியப்புற்று நிற் கும் பொழுது, அரசனே! உனக்கு இப்பெண் குழந்தை கடவு ளாற் கொடுக்கப்பட்டது. மகளைப்போல ஆதரவுடன் வளர்ப் பாயாக என்று ஓர் அசரீரி வாக்குத் தோன்ற, அது கேட்டு அரசன் மகிழ்ச்சியுற்று அக்குழந்தையை மனைவியின் கையிற் கொடுக்க, அவள் வாங்கித் தனப் பாலூட்டினாள். அங்கு நின்ற பிராமணர் முதலியோர் அரசனைக் கொண்டாடினார்கள். இவ் வாச்சரியத்தைக் கேள்வியுற்ற பட்டினத்து ஜனங்களெல்லாம் வந்து பார்த்து மகிழ்ந்தார்கள். அரசனும் மனைவியும் குழந்தை யுடன் மந்திரி முதலியோர் புடைசூழ்ந்துவர அரண்மனையை யடைந்து, குழந்தைக்குச் சாதகன்ம முதலியவற்றை விதிப்படி செய்து, ராஜராஜேசுவரியெனப் பெயரிட்டு அருமையாக வளர்த்து வந்தார்கள். சாமுண்டா என்பவளும் மனிதவுருக் கொண்டு அரசியிடம் வந்து அவளால் நன்கு மதிக்கப்பட்டுக் குழந்தைக்குச் செவிலித் தாய்போலப் பணிவிடையின் பொருட்டு அமர்ந்தாள்.

அப்பெண் ஐந்து வயதிலேயே அறுபத்து நான்கு சாஸ்திரங்களையும் உணர்ந்து யாவருக்கும் மகிழ்ச்சியளித்து வரும் நாளில் பத்து வயசு வந்தது. அரசன் தன் மகளுக்கு மணஞ் செய்ய எண்ணி, எல்லா வகையாலும் பொருத்தமான நாயகன் எங்குளன் என்று ஆலோசித்து, ஓரிடத்தும் இல்லையாக, சதுரங்க விளையாட்டிலாவது ஜெயிப்பவனுக்குக் கொடுப்பேன் என்று நிச்சயித்து எங்கும் தெரிவித்தான். எல்லாத் தேசத்து அரசர்களும் வந்து அவளோடு சதுரங்கம் விளையாடித் தோற்றுப் போனார்கள் அரசன் மிகக் கவலை யடைந்து, திருவருளாற் கிடைத்த நம் கன்னிகைக்கு உத்தம நாயகன் ஒருவன் இருப்பான் எனத் தேறி, சிவபெருமானைத் தியானித்துக்கொண்டு ஸ்தல யாத்திரை செய்யக் கருதி, வடதிசை நோக்கிப் புறப்பட்டான். அப்பொழுது நற்சகுனங்கள் உண்டாயின. அரசன் மனமகிழ்ந்து ஆலயத்துக்குச் சென்று திருநெல்லையப்பரையும் காந்திமதி யம்மையாரையும் வணங்கிக்கொண்டு, இடையிலுள்ள தலங்களை வழிபட்டு மதுரைக்கு வந்து, சோமசுந்தரக் கடவுளையும் மீனாக்ஷியம்மையாரையும் தரிசித்து, காவேரி நதிக்கரையை யடைந்து, பல தீர்த்தங்களில் ஸ்நாநஞ் செய்து ஸ்தலங்களையும் வழிபட்டுக்கொண்டு மேற்கு நோக்கிச் சென்று, திருவாரூரிய முதலிய தலங்களைத் தரிசித்துத், திருவாரூரை யடைந்து சிவ தரிசனஞ் செய்துகொண்டு மூன்று நாள் இருந்தான்.

## ஆறும் அத்தியாயம்

பின்பு அரசன் அங்கு நின்று புறப்பட்டுச் சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு புஷ்பவனத்தை யடைந்து, க்ஷீர நதி, கிருஷ்ண குஷ்டஹர தீர்த்தம் இவைகளில் ஸ்நானஞ் செய்து சிவதரிசனம் பண்ணிக்கொண்டு தனது வாசஸ்தானத்திலிருக்கும் பொழுது, சிவபெருமான் ஒரு சித்த வேடங்கொண்டு அரசனிடஞ் சென்று அவன் கேட்ட வினாக்களுக்கெல்லாம் விடை கூறி, அவனுடைய மகளோடு சதுரங்கம் விளையாடி ஜெயித்தார். அப்பொழுது அரசன் உமது ஜாதி, குலம், பெற்றோர்களைப்பற்றி உண்மையுரைப்பீர் என்று கேட்க; எனக்குத் தாய் தந்தையரில்லை.

சாதி, குலம் நானறியேன் என்று சொன்னார். அரசன் என் மகளை ஜெயித்தீராயினும் சாதி குல முதலியவற்றுள் ஒன்றும் அறியப்படாத நீர் என் பெண்ணுக்கு உரியவரல்லீர் என்று கூற, சித்தர் நீ உன் மகளைச் சதுரங்கம் விளையாடி ஜெயித்தவர்களுக்குக் கொடுப்பேன் என்று முன்பு சொன்னபடி கொடுக்கக் கடவாய் என்று கேட்டுக் கொண்டிருக்கும் பொழுது, மகா புத்திசாலியாகிய ராஜராஜேசுவரி, சித்தருரைத்த வார்த்தைகளின் பொருள்களை உள்ளபடி ஆராய்ந்து, சிவனேயென நிச்சயித்து, அரசனிடம் இரகசியமாகத் தெரிவிக்க, அவன் பயந்து பலவாறு துதித்து, சுவாமீ! அடியேன் செய்த குற்றங்களைப் பொறுத்தருளித் தேவரீருடைய உண்மைத் திருமேனியை எளியேனுக்குக் காட்டியருள வேண்டும் [illegible]பிரார்த்திக்கச் சிவபெருமான காட்சி தந்தருளினார். அரசன் நமஸ்கரித்துத் தரிசனஞ் செய்து கொண்டு ஆனந்த பரவசனாய் நின்றான்.

அப்பொழுது சிவபெருமான் அரசனே! உனக்குப்பூருவகன்மத்தால் இப்பிறவியிற் புத்திரப்பேறு இல்லையாயினும், உனது உண்மையன்பிற்கிரங்கி, உமையானவள் தனது அம்சத்தால் மகளாக வந்து உதித்திருக்கிறாள். உன் கருத்தின்படி அவளை நாம் ஜெயித்தோமாதலாலும், விவாகத்துக்கு உரிய பருவம் இதுவே யாதலாலும் இப்போது நமக்கு விவாகஞ் செய்து கொடுக்கக் கடவாய் என்று ஆஞ்ஞாபித்தருள, அரசன் விவாகஞ் செய்து கொடுக்க ஆயத்தமானான். திருநந்தி தேவருடைய கட்டளைப்படி விசுவகர்மா அங்கு வந்து திருக்கலியாண மண்டபத்தை நிருமித்தான். பிரமன் விட்டுணு முதலிய யாவரும் வந்து சிவபெருமானை வணங்கிக் கொண்டு பக்கத்தில் நின்றார்கள்.

பின்பு சிவபெருமான் திருக்கல்யாண மண்டபத்திற்கு எழுந்தருளி வந்து சிங்காசனத்திலே வீற்றிருந்தார். ஏனையோரும் தத்தமக்குரிய ஆசனத்தில் அமர்ந்தார்கள். அரசன் தன் மகளை ஸ்நானஞ் செய்து ஆடை ஆபரணாதிகளால் அலங்கரிக்கச் செய்து அழைத்துக் கொண்டு மனைவியுடன் வந்து, சிவபெருமானுடைய திருவடிகளை நறுமணங் கமழும் நீரால் கழுவி, அந்நீரைத் தன் தலையிற் றெளித்து உட்கொண்டு, மங்கள வாத்திய கோஷத்துடன் மந்திர முறைப்படி நீர் வார்த்து அப்புத்திரியை விவாகஞ்

செய்து கொடுத்தான். தேவர் முனிவர் முதலிய யாவரும் அம்மையோடு கூடிய சிவபெருமானை வணங்கித் துதித்துப் பேரானந்தமடைந்தார்கள். அரசன் யாவரையும் நன்கு உபசரித் தான். அவர்களும், அரசனைப் புகழ்ந்து, ஈசுவரனை வணங்கி விடைபெற்றுக் கொண்டு தத்தம் இருப்பிடம் போய்ச் சேர்ந் தார்கள். பிறகு அரசன் சிவபெருமானை வணங்கி அஞ்சலி செய்து கொண்டு சந்நிதானத்தில்நிற்கச்,சிவபெருமான் அரசனே உனக்கு வேண்டிய வரங்களைக் கேள் என்று ஆஞ்ஞாபித்தருள, சுவாமீ! தேவரீருடைய திருவடிகளில் எனக்கு எப்பொழுதும் அளவிறந்த பத்தி எவ்விதம் உண்டாகுமோ, அந்த மார்க்கத்தில் அடியேனைச் செலுத்தியருள வேண்டும். என் மகளும் அவளது பணிப்பெண்ணாகிய சாமுண்டி என்பவளும் இத்தலத்தில் எந் நாளும் உருவச் சிலையில் அமர்ந்து பூசிக்கப்பட வேண்டும். அவ் விருவரையும் தரிசித்தவர்கள் இஷ்ட சித்திகளைப் பெற வேண் டும் என்று பிரார்த்திக்க, நீ இப்போதே இவ்விருவருக்கும் சிலா ரூபங்களை நிருமித்து ஸ்தாபித்து விட்டு உனது நகரம் போய்ச்சேர்ந்து அரசாட்சி செய்துகொண்டிருந்து பின் திருக் கைலாசத்தை அடைவாய் என்று அருளிச்செய்து லிங்கத்தில் அந்தர்த்தானமானார். ராஜராஜேசுவரியம்மையாரும் அந்தர்த் தானமானார். அரசன் ஒரு மாசம் வரை அங்கிருந்து ராஜ ராஜேசுவரியம்மை சாமுண்டி இவர்களின் சிலா ரூபங்களை ஸ்தாபித்து நித்தியபூசை நடந்துவர நியமனம் பண்ணித் தனது நகரஞ் சென்று அரசாட்சி செய்துகொண்டிருந்து திருக் கைலாசமலையை யடைந்து இன்புற்றிருந்தான்.

நிலம்புகழும் பூவனூர் வாழ்க சாட்சி
விநாயகனுங் கருணைமிக நீடு வாழ்க
தலந்திகழும் புட்பவன நாதனென்னுஞ்
சதுரங்க வல்லவ நாதன்றான் வாழ்க
நலந்தருகற்பகவல்லி யுடனிராச
ராசேசுவரி வாழ்க பணிகள் செய்யும்
புலம்பெருகு சிவநேசர் வாழ்க இந்தப்
புனித மகிமையைக் கேட்போர் புகழ்வோர் வாழ்க.

## திருப்பூவனூர்ப் புராண வசனம்
முற்றுப் பெற்றது.

MAHAMAHOPADHYAYA
U.V. SWAMINATHA IYER LIBR.